[1984 மார்ச் 12

கோ-ஆப்டெக்ஸ் மூலம் நவீன அச்சு வேலை (பிரிண்ட்) செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்க திட்டம்.

279—(*வினா எண் 21625)—திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கோ-ஆப்டெக்ஸ் மூலம் நவீன அச்சுவேலை பிரிண்ட் செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இல்லை.

திருச்சி உறையூர் தேவாங்கர் கூட்டுறவுச் சங்கத்தினால் கட்டப்பட்ட வீடுகள்.

280—(*வினா எண் 22335)— திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஆம் ஆண்டு இறுதியில் திருச்சி உறையூர் தேவாங்கர் கூட்டுறவுச் சங்கத்தினால் கட்டப்பட்ட வீடுகள் வெள்ளத்தினால் இடிந்து விழுந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை வீடுகள் ?

(இ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) 22 வீடுகள் முழுவதும் இடிந்து விழுந்துவிட்டன. மேலும் 14 வீடுகள் பெரிதும் சேதமடைந்துள்ளன

(இ) பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு உதவித் தொகையும், கடனும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இடைக்கால நிவாரணமாக ஒவ்வொருவருக்கும் சுமார் 300 ரூபாய் மானியமும், 100 ரூபாய் கடனும் மற்றும் அரிசி, மண்ணெண்ணெய், வேட்டி, புடவை போன்ற பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன. பழுதடைந்த வீடுகளைத் திரும்ப கட்டி முடிக்கும் வரையில் தற்காலிகமாக தென்னங் கீற்று வேயப்பட்ட வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது 22 வீடுகள் முழுவதும் இடிந்து விட்டது என்றும் 14 வீடுகள் பெரிதும் சேதமடைந்துள்ளன என்றும் அதற்கு மானியமாக 300 ரூபாயும் கடனாக 100 ரூபாயும் அளிக்கப்பட்டதாக சொன்னார்கள். 300 ரூபாய் கடன் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தரப்பட்டு இருக்கிற தொகை. இந்த 22 வீடுகள் முழுவதும் இடிந்து விழுந்து இருக்கிறது, 14 வீடுகள் இன்றைய தினம் மிகுந்த சேதம அடைந்து இருக்கிறது. அதிலும் குடி இருப்பதற்கு முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த வீடுகளுக்கு